இரட்சிப்பு




# கல்லறை

**Cemetery**




## உறங்கும் இடம்

‘‘மரணத்தில் ஒரு மனிதன் உறங்குவதாகவே தோன்றுகிறது’’

நித்திரை மரணத்தை விளக்கிக் கூறும் நன்கு அறிந்த உருவகமாக விளங்குகிறது.

தானி 12:2, 2 கொரி 5:8

> ‘‘ஒவ்வொரு இரவிலும் மரணத்திற்கு அடையாளமான உறக்கத்தில் அதை வெளிப்படுத்துகிறோம். மேலும் ஒவ்வொரு நாள் காலையும் உயிர்த்தெழுதலைப் போல இருக்கிறது’’.

மரணத்தின் போது உள்ளான மனிதன் (ஆவி ஆத்துமா) சரீரத்தை விட்டு பிரிந்து கர்த்தரோடு செல்லுகிறது. ‘‘சரீரம் மட்டுமே உறங்குகிறது’’. லூக் 16:19–31, 2கொரி 5:8

மரணம் = கிறிஸ்துவுடனே கூட இருப்பது அதிக நன்மையானது, ஆதாயம்

பிலி 1:21,23

இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

## ஒரு நித்திய நித்தியமான வாழ்க்கைக்கான வாசல் தான் மரணம்.

சபை எடுத்துக் கொள்ளப்படும் வேளை வரும் வரை கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின் சரீரங்கள் நித்திரை செய்யும் இடம் ‘கல்லறை’. 1 தெச 4:16

மரணம் என்பது உண்மையான அந்த மனிதனிலிருந்து சரீரம் பிரிக்கப்படுவது.

சரீரமானது அழுகி அழிந்து போகிறது மண்ணிற்கு மண்ணாக சாம்பலுக்குச் சாம்பலாக அது போய் விடுகிறது.

மரித்துபோன சரீரத்திற்கும் உயிரோடு எழுப்பப்பட வேண்டிய சரீரத்திற்கும் உள்ள வித்தியாசம் பெரியதாக இருக்கும். 1 கொரி 15:40,41,39,38

| **ஜென்ம சரீரம்** | **ஆவிக்குரிய சரீரம்** |
|---|---|
| 1 கொரி 5:42, 43, 50, 55–57 | |
| • ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட சரீரம்<br>• மரணத்திற்குரிய சரீரம் சாவுக்கேதுவானது<br>• பாவம் பண்ணக்கூடிய சரீரம் அழிவுள்ளது<br>• தேவ மகிமையற்றது<br>• மண்ணான (களிமண்) சரீரம்<br>• மாம்சமும் இரத்தமும் உள்ள சரீரம் | • ஆவிக்குரிய சரீரம் சாவாமையுடையது<br>• ஆவியானவராலே பூரணமாக<br>• ஆளப்படுகின்ற சரீரம்<br>• கனமுள்ளது, மகிமை உள்ளது<br>• பெலன் உள்ளது<br>• உயிர்த்தெழுதலின் சமயத்திலே கெட்டுப்போகாத சரீரம் நமக்கு கொடுக்கப்படுகிறது. |

ஆவிக்குரிய சரீரம் ஓரளவிற்கு இந்த சரீரத்தை போலவே இருக்கும்.

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

மரணம் – ஒரு விதையைப் போல இந்த சரீரம் மண்ணிற்குள்ளே வைக்கப்பட வேண்டும்.

சிலருடைய சரீரங்கள் தான் சாம்பலாகிவிட்டதே இனி எப்படி கிறிஸ்து அதை உயிரோடு எழுப்ப முடியும் என எண்ணுகிறீர்களா ? தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

ஒரு கல்லறையினிடத்தில் இருந்தோ அல்லது கடலிலே கரைக்கப்பட்ட சாம்பலிலிருந்தோ தேவன் மீண்டும் ஒரு சரீரத்தைக் கொண்டு வருவார்.

| சரீரத்தில் தேகத்தில் குடியிருக்கும் போது → | கர்த்தரிடத்தில் குடியிராமல் இருக்கிறோம் |
| --- | --- |
| தேகத்தை உடலை விட்டு வெளியேறி (மரித்து) கர்த்தரோடு குடியிருக்கிறோம். 2 கொரி 5:7–9 | |

நித்திரை தூக்கம் நிரந்தரமானது அல்ல, மரணமும் நிரந்தரமானது அல்ல

தூங்கி கொண்டிருப்பவர்கள் எழுந்து நடப்பார்கள்

மரித்தோரும் உயிரோடு எழுந்திருப்பார்கள்

மரணத்தில் கல்லறையில் படுத்திருப்பது சரீரமே

மாம்ச சரீரம் மண்ணிற்கு திரும்புகிறது. பிர 12:7, ஆதி 3:19

உயிர்த்தெழுதலில் சரீரமே எழுந்து நிற்கிறது.

கல்லறை – மரித்த பின் சரீரம் தங்கும் 'தங்கும் விடுதி'

